ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் ப்ரீபெய்டு கார்டு - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள மற்றும் www.equitasbank.com என்ற இணையதளத்தில் கிடைக்கக்கூடிய விவரங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அந்த விவரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக உங்களுக்குத் தெரிவிக்கும் பொறுப்பை ஏற்கிறேன். வங்கியுடனான இந்த உறவுமுறைக்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்களை இணையதளத்தில் மட்டுமே பார்க்க முடியும் என்பதைப் புரிந்துகொள்கிறேன். மேலே உள்ள தகவல் ஏதேனும் தவறானது அல்லது பொய்யானது அல்லது தவறாக வழிநடத்தக்கூடியது அல்லது தவறாகச் சித்தரிப்பது எனக் கண்டறியப்பட்டால், அதற்கு நான் பொறுப்பேற்க வேண்டும் என்பதை நன்கு அறிவேன்.

2. இந்த விண்ணப்பப் படிவத்தில் (மற்றும் குறிப்பிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அனைத்து ஆவணங்களிலும்) கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் தகவல்களும் எல்லா வகையிலும் உண்மையானவை, சரியானவை, முழுமையானவை மற்றும் மிகச் சமீபத்திய விவரங்கள் அடங்கியவை, நான் எந்த தகவலையும் மறைக்கவில்லை. நான் வழங்கிய சில விவரங்கள் வங்கி நிறுவனங்களை நிர்வகிக்கும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களுக்குத் தேவைப்படுகின்றன என்பதைப் புரிந்துகொண்டுள்ளேன். ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் அல்லது அதன் குழு நிறுவனங்களுக்குத் தேவைப்படக்கூடிய கூடுதல் தகவல்களை வழங்க ஒப்புக்கொள்கிறேன்.

3. வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாதற்கான வங்கி நடவடிக்கைகள் எதுவும் எனக்கு எதிராக இல்லை அல்லது நான் திவாலாகிவிட்டதாக எந்த விதமான தீர்ப்பும் வழங்கப்படவில்லை.

4. விண்ணப்பப் படிவம் மற்றும் பிரசுரங்களைப் படித்திருக்கிறேன். ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் குழு நிறுவனங்களிடமிருந்து நிதி அல்லது சேவை அல்லது தயாரிப்புகளைப் பெறுவதற்கான அனைத்து விதிமுறைகள் அல்லது நிபந்தனைகளையும் அறிந்திருக்கிறேன்.

5. எந்தவொரு காரணத்தையும் வழங்காமல் எந்தவொரு விண்ணப்பப் படிவத்தையும் நிராகரிக்கும் உரிமை ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் அல்லது அதன் குழு நிறுவனங்களுக்கு உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன், புரிந்துகொள்கிறேன். விண்ணப்பப் படிவங்கள், அவற்றுடன் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைத் தக்கவைத்துக்கொள்வதற்கான உரிமை ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் அல்லது அதன் குழு நிறுவனங்களுக்கு உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன், புரிந்துகொள்கிறேன். தக்கவைத்துக் கொள்ளப்பட்ட ஆவணங்கள் எதுவும் என்னிடம் திருப்பி அளிக்கப்படாது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன், புரிந்துகொள்கிறேன்.

6. எனது நிறுவனம் மற்றும் அதன் ஊழியர்களுக்கும் இந்தத் திட்டம் எந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி வழங்கப்படுகிறதோ அவற்றையும் படித்துப் புரிந்து கொண்டுள்ளேன்.

7. பணம் செலுத்தல் தொடர்பாக எனது நிறுவன நிர்வாகத்தினர் வழங்கிய அறிவுறுத்தலை மூன்று வேலை நாட்களுக்குள் திரும்பப்பெற அவர்களுக்கு முழு உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். கார்டில் இதுபோன்ற ஏதேனும் பற்றுகளுக்கு (டெபிட்) மறுப்பு கூறவோ, வங்கியை பொறுப்பேற்கவோ நிர்ப்பந்திக்க மாட்டேன்.

8. எனது தற்போதைய நிறுவனத்தில் இருந்து எனது வேலையை விட்டு நின்றுவிட்டால், அதுகுறித்து உடனடியாக ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு அறிவிப்பது எனது பொறுப்பு என்பதைப் புரிந்துகொண்டுள்ளேன். அதன்பிறகு இந்தத் திட்டத்தின் கீழ் எந்தவொரு அல்லது அனைத்து பலன்களையும் அனுபவிப்பதை நிறுத்திவிடுவேன். எனது குடியிருப்பு அல்லது பணி தொடர்பான மாறுதல்களை ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் குழு நிறுவனங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதையும், ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் குழு நிறுவனங்களுக்கு அவ்வப்போது தேவைப்படக்கூடிய கூடுதல் தகவல்களை நான் வழங்க வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டுள்ளேன்.

9. இந்த விண்ணப்பத்தில் உள்ள தகவல் (அல்லது வேறு ஏதேனும் கூடுதல் விண்ணப்பப் படிவங்கள் உள்பட) தொடர்பாக அல்லது கூடுதல் விவரங்களை நான் வழங்க வேண்டும் அல்லது எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் கருதும்பட்சத்தில், எந்தவொரு தகவலைச் சரிபார்க்கவும், அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளவும் எனது அலுவலகம் / இல்லத்தில் வந்து விசாரிக்க அல்லது என்னை அல்லது வேறு எந்த வகையிலும் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற அல்லது வழங்க ஈக்விடாஸ்

ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் மற்றும் / அல்லது அதன் கூட்டாளர்களை அங்கீகரிக்கிறேன். இதில், உறுப்பினராவதற்குத் தேவையான தகவல்களை உறுதிப்படுத்துவது அல்லது எனது கணக்கை நல்ல நிலையில் பராமரிப்பது உள்ளிட்டவையும் அடங்கும் என்பதையும் ஆனால் அவை மட்டுமே இல்லை என்பதையும் புரிந்து கொண்டுள்ளேன்.

10. எனது விண்ணப்பத்துடன் தொடர்புடைய அனைத்து தகவல் தரவு அல்லது ஆவணங்களை மற்ற ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் / குழு நிறுவனங்கள் / வங்கி / நிதி வழிகாட்டுதல் / கடன் நிர்வாக அமைப்புகள் / முகவர்களின் சட்டரீதியான அமைப்புகளுடன் பகிர அல்லது பங்கிட ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் / அதன் குழு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குகிறேன். கூறப்பட்ட தகவல் / தரவைப் பயன்படுத்த அல்லது அவற்றைச் செயல்படுத்த அல்லது செயல்படுத்தப்பட்ட தகவல் / தரவு / தயாரிப்புகளை மற்ற வங்கிகள் / நிதி நிறுவனங்கள் / கடன் வழங்குவோர் / அது போன்ற அமைப்புகளுடன் பதிவு செய்துள்ள பயனர்களுக்கு வெளிப்படுத்த, அதுபோன்ற அமைப்புகள் / நபர்களுக்குத் தேவை ஏற்படக்கூடும் என ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் / அதன் குழு நிறுவனங்கள் கருதலாம். அதுபோன்ற அமைப்புகள் / நபர்கள் இந்தத் தகவல்களைப் பயன்படுத்துவதற்கு ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் / அதன் குழு நிறுவனங்கள் பொறுப்பேற்காது என்றும் புரிந்துகொண்டுள்ளேன்.

11. ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் / அதன் குழு நிறுவனங்கள் வழங்கும் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டிய குறிப்பிட்ட தயாரிப்புளின் சேவைகளுக்கான கூடுதல் விண்ணப்பப் படிவங்களை அவ்வப்போது வழங்கப்படும் பரிந்துரையின்படி பூர்த்தி செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன், புரிந்துகொள்கிறேன். அந்த விண்ணப்பம் இந்த விண்ணப்பத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படும். அதுபோல இந்த விண்ணப்பமும் அந்த விண்ணப்பத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படும். இது போன்ற கூடுதல் படிவங்களில் வெளிப்படுத்தப்படாவிட்டால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் தகவல்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட அல்லது இங்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் உண்மையானவை, சரியானவை, முழுமையானவை மற்றும் அனைத்து வகையிலும் மிகச் சமீபத்திய தகவலின் அடிப்படையிலானவை என்று ஒப்புக்கொள்கிறேன், புரிந்துகொள்கிறேன். தரவு நிர்வாகத்தை எளிதாக்குவதற்கு, அத்தகைய விண்ணப்பத்தில் விண்ணப்பப் படிவ எண் மற்றும் / அல்லது ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பரிந்துரைக்கும் அதுபோன்ற விவரங்களை இணைக்க வேண்டும் ஒப்புக்கொள்கிறேன், புரிந்துகொள்கிறேன்.

12. ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எனக்கு ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் ப்ரீபெய்டு கார்டை வழங்க அங்கீகரிக்கிறேன். ப்ரீபெய்டு கார்டை வழங்குவது மற்றும் அதன் உபயோகம் அவ்வப்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் நிர்வகிக்கப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன், அவற்றுக்குக் கட்டுப்படவும் ஒப்புக்கொள்கிறேன். ப்ரீபெய்டு கார்டின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்தால் திருத்தப்பட வேண்டியவை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கார்டைப் பயன்படுத்துவதற்கான கட்டணம் மற்றும் கட்டணங்களுக்கு இணையான தொகையை ஆண்டுதோறும் எனது கார்டு கணக்கில் பற்றாகப் பிடித்துக் கொள்ள (டெபிட்) ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்துக்கு நிபந்தனையற்ற, திரும்பப்பெற முடியாத அங்கீகாரத்தை வழங்குகிறேன். இந்தக் கணக்கு ஒருவரால் மட்டுமே இயக்கப்படும் என்பதை இதன்மூலம் உறுதிப்படுத்துகிறேன்.

13. இந்தக் கார்டைப் பயன்படுத்தும்போது, பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு நான் எப்போதுமே இணங்குவேன்.

14. கார்டு, அதன் ரகசியக் குறியீடு மற்றும் கடவுச்சொல்/கடவுச்சொற்களை எல்லா நேரங்களிலும் பாதுகாப்பதும் மறைத்து வைத்துக் கொள்வதும் எனது பொறுப்பாகும் என்பதைப் புரிந்துகொள்கிறேன். அவ்வாறு செய்யத் தவறியதால் ஏற்படும் இழப்பு / சேதம் / தீங்குக்கு ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் பொறுப்பேற்க வலியுறுத்த மாட்டேன்.

15. எந்தவொரு அறிவிப்புகளையும் மீறுதல், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுதல் அல்லது அங்கீகரிக்கப்படாத / சட்டவிரோதமான முறையில் கார்டைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் விளைவாக ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பு / சேதம் / தீங்கிற்கும் ஈக்விடாஸ் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு முழுமையாக இழப்பீடு வழங்க இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன்.

16. மேலே பதிவுசெய்யப்பட்டுள்ள எண் / மின்னஞ்சல் முகவரியில் குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் மத்திய KYC பதிவகத்தில் இருந்து தகவல்களைப் பெற இதன்மூலம் சம்மதம் தெரிவிக்கிறேன்.

17. எனது சார்பாக, எனது ப்ரீபெய்டு கார்டிலிருந்து மூலக் கணக்கிற்கு நிதியைத் திரும்பப் பெற எனது கார்ப்பரேட் நிறுவனம் கோரலாம் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

18. எனது சார்பாக, எனது கார்ப்பரேட் நிறுவனம் அனைத்து ப்ரீபெய்டு கார்டுகளையும் அதன் விருப்பப்படி மூடுமாறு கோரலாம் என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறேன்.

19. இங்கு வழங்கப்பட்டுள்ளபடி கார்ப்பரேட்டின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கி வங்கி நடந்து கொள்வதால், எந்த வகையிலும் வங்கியிடம் எந்தவொரு இழப்பீடும் கோர முடியாது.

20. வழங்கப்பட்டுள்ள விவரங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் உண்மையானவை என்று இதன்மூலம் அறிவிக்கிறேன்.

21. ப்ரீபெய்டு கார்டின் செல்லுபடியாகும் காலம் கார்டின் முன்பகுதியில் இடம்பெற்றிருக்கும்.